UNIVERSITY OF CAMBRIDGE INTERNATIONAL EXAMINATIONS
General Certificate of Education Advanced Level

**TAMIL** **9689/04**

Paper 4 Texts **October/November 2010**

**2 hours 30 minutes**

Additional Materials: Answer Booklet/Paper

*0884153971*

**READ THESE INSTRUCTIONS FIRST**

If you have been given an Answer Booklet, follow the instructions on the front cover of the Booklet.
Write your Centre number, candidate number and name on all the work you hand in.
Write in dark blue or black pen.
Do not use staples, paper clips, highlighters, glue or correction fluid.

Answer any **three** questions, each on a different text. You must choose **one** from Section 1, **one** from Section 2 and **one other**.
Write your answers in **Tamil** on the separate answer paper provided.
Dictionaries are **not** permitted.
You may **not** take set texts into the examination.
You should write between 500 and 600 words for each answer.

At the end of the examination, fasten all your work securely together.
All questions in this paper carry equal marks.

**முதலில் கீழே உள்ளதைப் படிக்கவும்**

விடைகள் எழுதும் தாளிலுள்ள கட்டளைகளைப் பின்பற்றவும். அதில் உங்கள் பெயர் ,
நம்பர், சென்டர் நம்பர் ஆகியவற்றை எழுதவும். கருப்பு அல்லது கரு நீல பேனா மையினால்
விடைகளை எழுதவும்.
பசை, ஹைலைட்டர்கள், ஸ்டேப்பிள் பின், பிழை திருத்தும் திரவங்கள், பேப்பர் க்ளிப்புகளைப்
பயன் படுத்தாதீர்கள்.

ஏதாவது **மூன்று** கேள்விகளுக்கு வேறு வேறு பாடப் பகுதியிலிருந்து எடுத்து விடைகள்
எழுதவும். பகுதி ஒன்றிலிருந்தும் பகுதி இரண்டிலிருந்தும் ஒவ்வொரு கேள்விக்கு விடை தரவும். மற்றொரு
கேள்வியை எந்தப் பகுதியிலிருந்தும் எடுக்கலாம்.
உங்களுடைய விடைகளை தனியாகக் கொடுக்கப்பட்டுள்ள விடைத் தாளில் **தமிழில்** எழுதவும்.
அகராதிகளை தேர்வு நடக்கும் இடத்துக்குக் **கொண்டுபோகக்கூடாது.**
புத்தகங்களை தேர்வு நடக்கும் இடத்துக்குள் கொண்டுபோகக்கூடாது.
ஒவ்வொரு கேள்விக்கும் 500 முதல் 600 சொற்களில் விடை எழுதவேண்டும்.

தேர்வு எழுதி முடித்தவுடன் விடைத்தாள்கள் எல்லாவற்றையும் சேர்த்துக் கட்டிக்கொடுக்கவும்.
எல்லா கேள்விகளுக்கும் சமமான மதிப்பெண்கள் தரப்படும்.
(ஒவ்வாரு விடைக்கும் 25 மதிப்பெண் வீதம் மூன்று விடைகளுக்கும் 75 மதிப்பெண்)

This document consists of **3** printed pages and **1** blank page.

DC (LEO/KN) 19678/6
© UCLES 2010

UNIVERSITY *of* CAMBRIDGE
International Examinations

**[Turn over**

WWW.XTREMEPAPERS.NET

## பகுதி – 1

**1** ஏதாவது ஒரு வினாவிற்கு (அ அல்லது ஆ) விடை தரவும்

அ. குறுந்தொகை

ஞாயிறு பட்ட அகல் வாய் வானத்து
அளியதாமே கொடுஞ் சிறைப் பறவை,
இறை உறை ஓங்கிய நெறி அயல் மரா அத்த
பிள்ளை உள்வாய்ச் செரீஇய
இரை கொண்டமையின் விரையுமால் செலவே.

– தாமோதரனார்

(i) பறவைகளைக் கொண்டு தலைவியின் கூற்றை புலவர் எப்படி வருணிக்கிறார்?

(ii) நெய்தல் துறையின் சிறப்புகளைக் கூறி அதில் இப்பாட்டு எவ்வாறு பொருந்தும் என்று விளக்கவும்.

ஆ. புறநானூறு

(i) கல்வியின் சிறப்பை ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் எவ்வாறு போற்றுகிறார்?

(ii) இந்தப் பாட்டு பொருண்மொழிக்கஞ்சி துறையில் எவ்வாறு பொருந்தும் என்றும் விளக்குக.

**2** ஏதாவது ஒரு வினாவிற்கு (அ அல்லது ஆ) விடை தரவும்

அ. திருக்குறள்

சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூ உங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு

அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்தப் புகலும் இல

(i) இம்மைக்கும் மறுமைக்கும் அறம் உதவும் என்று கூறும் வள்ளுவர் வேறு என்ன கருத்துக்களைக் கூறுகிறார்?

(ii) 'அறத்தான் வருவதே இன்பம்'-என்ற சொற்களால் வள்ளுவர் வலியுறுத்தும் கருத்து என்ன?

ஆ. ஒழுக்கத்தினால் கிடைக்கும் உயர்வை வள்ளுவர் எப்படியெல்லாம் போற்றிப் பாடுகிறார்?

© UCLES 2010 

WWW.XTREMEPAPERS.NET

3 ஏதாவது ஒரு வினாவிற்கு (அ அல்லது ஆ) விடை தரவும்

அ. தேவாரம்- திருஞானசம்பந்தர்

மதிநுதல் மங்கையோடு வட ஆலிருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியோடு கொன்றைமாலை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலன் அங்கி நமனோடுதூதர்
கொடுநோய்கள் ஆன பலவும்
அதிகுண நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

(i) 'கொதியுறு காலன் அங்கி நமனோடுதூதர்' என்ற சொற்களின் பொருள் என்ன?

(ii) சிவபெருமானை சம்பந்தர் ஒவ்வொரு பாடலிலும் எப்படி வருணிக்கிறார்?

ஆ. இறைவனை வழிபடுவோரை எந்த இன்னல்களும் அணுகாது என்று சம்பந்தர் எவ்வாறெல்லாம் பாடுகிறார்?.

## பகுதி – 2

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுள்ளும் இரு பிரிவுகள் உள்ளன.

ஏதாவது ஒன்றிற்கு மட்டும் (அ அல்லது ஆ) விடை தருக.

4 இக்காலக் கவிதைகள்

அ. பாரதியார்

'எளிய தமிழ் நடையில் உயர்ந்த கருத்துக்களை விளக்குவதில் பாரதியார் சிறந்தவர்'-இதை ஏற்கிறீர்களா?இல்லையா? எடுத்துக்காட்டுகளுடன் பதில் தரவும்.

ஆ. பாரதிதாசன்

புத்தக சாலை எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்று பாரதிதாசன் விரும்புகிறார் என்பதை ஒரு கட்டுரை வாயிலாக விளக்கவும்.

ஏதாவது ஒன்றிற்கு மட்டும் (அ அல்லது ஆ) விடை தருக.

5 தண்ணீர் தண்ணீர்- கோமல் சுவாமிநாதன் நாடகம்

அ. தண்ணீர் இல்லாத கிராமத்தில் ஏற்படும் பிரச்சினைகளை கதாபாத்திரங்களின் வாயிலாக ஆசிரியர் எப்படி விளக்குகிறார்?

ஆ. நாடகத்தில் வரும் கதாபாத்திரங்களில் உங்களை மிகவும் கவர்ந்தவர் யார்? ஏன்?

ஏதாவது ஒன்றிற்கு மட்டும் (அ அல்லது ஆ) விடை தருக.

6 நவீன தமிழ்ச் சிறுகதைகள்

அ. பக்கத்தில் வந்த அப்பா- கதையில் சுந்தர ராமசாமியின் பாத்திரப் படைப்பு எவ்வாறு உள்ளது என்பதை விமர்சனம் செய்யவும்.

ஆ. 'மைலாப்பூர்' கதை உங்களுக்குப் பிடித்திருக்கிறதா ? உங்கள் கருத்தைத் தொகுத்து எழுதுங்கள்.

© UCLES 2010


WWW.XTREMEPAPERS.NET

**BLANK PAGE**

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

University of Cambridge International Examinations is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is itself a department of the University of Cambridge.

© UCLES 2010


WWW.XTREMEPAPERS.NET